சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் கருத்திட்டம் (SARP)

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

வெற்றிடம்

சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் கருத்திட்டம் (SARP) விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) மற்றும் இலங்கை அரசினால் ஒன்றிணைக்கட்ட நிதி வழங்கும் திட்டம் என்பதோடு, காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ள அநுராதபுரம், வவுனியா, மாத்தளை, மன்னார், புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் 40,000 கிராமிய வீடுகளுக்கு மீள்திறன் மற்றும் சந்தை பங்கேற்பை கட்டியெழுப்பும் நோக்காகக் கொண்டுள்ளது. பிரதான திட்டத்தின் பிரதிநிதித்துவ நிறுவனமாக கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு இருப்பதோடு, திட்ட முகாமைத்துவ பிரிவு (PMU) ஒன்று மற்றும் SARP செயற்படுத்தலுக்காக இரு பிராந்திய ஒருங்கிணைப்பு அலுவலகங்கள் (நிக்கவெரட்டிய மற்றும் மதவாச்சி) நிறுவப்பட்டுள்ளன. முழுமையான திட்ட நிதிப் பெறுமதி 82 மில். அமெரிக்க டொலர்களாகும்.

திட்ட முகாமைத்துவ பிரிவில் (பத்தரமுல்லை) கீழ் குறிப்பிடப்பட்ட பதவிக்காக இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கிராமிய நிதி நிபுணர் (பிரிவு C) – PMU இல் 01 பதவி

சம்பள அளவு மற்றும் தகைமை: 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றுநிருபத்தின் அடிப்படையானது.

மேல் குறிப்பிடப்பட்ட பதவிக்காக பொது நிபந்தனைகள் பொருந்தும்

அனைத்து தகைமைகள் பதவிக்கு பொருந்தும் துறையாக இருத்தல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் தமது விண்ணப்பங்கள் (உறவினர் அல்லாத இரு பரிந்துரையாளர்களின் விபரங்கள் அடங்கலாக) மற்றும் தொடர்புடைய அனைத்து சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். தற்போது அரச அல்லது அரச சார்பு பிரிவில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள், உறவினர் அல்லாத பரிந்துரையாளர்கள் இருவரின் விபரங்கள் அடங்கலாக அவர்களின் விண்ணப்பங்களை, குறித்த அனைத்து சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதி ஒன்றை தமது நிறுவன தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். அனைத்து விண்ணப்பங்களும் 2026.12.04 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

தேவையான தகைமைகள், அனுபவம், குறிப்பு விதிமுறைகள் (TOR) மற்றும் விண்ணப்பிக்கும் நடைமுறைகள் தொடர்பில் மேலதிக விபரங்களுக்கு தயவுடன் www.sarp.lk இற்கு பிரவேசிக்கவும்.

திட்டப் பணிப்பளார்,
சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் கருத்திட்டம்,
இலக்கம் 759/2, மயுரபாத பிரிவெனா, தலங்கம தெற்கு, பெலவத்த,
பத்தரமுல்லை.

2026 நவம்பர் 22